Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 078 | புதன்கிழமை Wednesday | 17.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழகத்தில் ரூ.13.18 லட்சம் கோடி கடன்

## வெள்ளை அறிக்கையில் திடுக்கிடும் தகவல்



தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் தமிழக வெற்றி கழகம் தலைமையில் கூட்டணி அரசாக பதவியேற்றுள்ளது. முதல்வர் விஜய் பொறுப்பேற்றதிலிருந்து சில அதிரடியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

புதிய அரசாங்கம் அமைந்து ஒரு மாதத்தை கடந்து விட்டது. இதற்கு முன் தமிழகத்தை ஆட்சி செய்த திமுக மற்றும் அதிமுக அரசாங்கங்கள், மாநில அரசு சார்பில் இதுவரை 10 லட்சம் கோடியை தாண்டி கடன் வாங்கி உள்ளதாக, புதிய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த தொகை இந்தியாவில் மற்ற மாநிலங்களை விட அதிக கடன் தொகைகளில் ஒன்றாக இருக்கிறது. தரவுகளின்படி அதிக கடன் வாங்கியதில் இந்தியாவில் நம்பர் 1மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்பது குறிப்பிட தக்கது.

இறுதியாக ஆட்சியில் இருந்த திமுக கஜானாவை காலி செய்து விட்டதாக தவெக சார்பில் தொடர்ச்சியாக கூறப்பட்டுள்ளது. தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையை பொதுமக்கள் அறியும்படி வெள்ளை அறிக்கை விடப்படும் என்று பதவியேற்க நாளில் முதல்வர் விஜய் உறுதியளித்திருந்தார். இந்த வெள்ளை அறிக்கை மூலம் அரசுத் துறைகளின் உண்மையான நிதி நிலை மற்றும் கடன் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம். கடந்த கால அரசாங்கத்தின் நிர்வாக செயல்பாடுகளை மக்கள் வெளிப்படையாக அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

மாலை 5.30 மணி அளவில் சென்னைத் தலைமைச் செயலகத்தில், நிதி அமைச்சர் மரிய வில்சன் தமிழகத்தின் தற்போதைய நிதி நிலைமை குறித்த விரிவான வெள்ளை அறிக்கையை அதிகாரப்பூர்வமாக வெளியிடுகிறார். தமிழகத்தின் சட்டமன்ற கூட்டத்தொடர் ஜூன் 18 ஆம் தேதி கூட உள்ள சூழ்நிலையில் இன்று இந்த அறிக்கை வெளியாக இருக்கிறது.

இந்த வெள்ளை அறிக்கையில் தமிழக அரசின் வருவாய் , அரசாங்கத்தின் வருவாய் இழப்புகள் , தமிழக மின்சார வாரியம் மற்றும் போக்குவரத்து துறைகளில் கடன்கள் மற்ற கடன்களைப் பற்றியும் தெளிவாக அறிவிக்கப்படும். புதிய அரசாங்கம் கொடுத்துள்ள மகளிர் உரிமைத் தொகை உயர்வு, இலவச பேருந்து பயணம் , 200 யூனிட் இலவச மின்சாரம் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதால் அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் குறித்தும் இதில் விளக்கப்படும்.

கடந்த அறுபது ஆண்டுகளில் வாங்கிய கடனை விட திமுக அரசு 5 ஆண்டுகளில் வாங்கிய கடன் மிகவும் அதிகம். குஜராத், கர்நாடகா போன்ற மாநிலங்கள் உபரி வருவாயை பெறுகின்றன. தமிழ்நாட்டில் வருவாய் பற்றாக்குறை 78,000 கோடி. ஒரு ஆண்டுக்கு தமிழக அரசு 67,000 கோடி வட்டியை கட்டுகிறது.

திமுக ஆட்சியில் தனிநபர் கடன் 92 சதவீதம் உயர்ந்து உள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு வாங்கிய கடன் மட்டும் 5 லட்சம் கோடி

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தனிநபர் மீதும் 1,28,934 கடன் உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்த வருவாயில் வட்டி செலுத்தும் அளவு மட்டும் 22.8% இந்தியாவின் முதன்மை வருவாய் ஈட்டும் மாநிலமாக திகழ்ந்த தமிழ்நாடு தற்போது சராசரிக்கும் கீழே சரிந்துள்ளது. தமிழ்நாட்டின் உண்மையான கடன் அளவு ரூ.13.18 லட்சம் கோடி. வருவாய் பற்றாக்குறை கொரோனா காலத்தைவிட அதிகரித்துள்ளது. வருவாய் பற்றாக்குறை 78,324 கோடியாக உயர்ந்து ள்ளது. இது வரலாற்றி லேயே இல்லாத அளவி ற்கு உச்ச அளவாகும். அன்றாட நிர்வாக செயல்பாடு களை சமாளிக்கவே கடன் வாங்கிக் கொண்டிருக்கிறோம். 60 வருடத்தில் தமிழ்நாடு அரசு வாங்கிய கடனை விட திமுக அரசு அதிகம் கடன் வாங்கியுள்ளது. 60 வருடங்களில் தமிழ்நாடு அரசு வாங்கிய கடன் ரூ.5லட்சம் கோடி. தி.மு.க ஆட்சியில் கடந்த 5 வருடங்களில் வாங்கிய கடன் மட்டும் ரூ.5லட்சம் கோடி." என்றார்.

# எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர்



சென்னை: அதிமுக எம்எல்ஏவும், முன்னாள் அமைச்சருமான சி.விஜயபாஸ்கர் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அதிமுக தலைமை மீது அதிருப்தியில் இருந்து வந்த சி.விஜயபாஸ்கர் தற்போது இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளார்.

அரங்கேறும் அதிரடி காட்சிகள்

2026 சட்டமன்றத் தேர்தலுக்கு பின்னர், தமிழக அரசியலில் இதுவரை நடைபெறாத காட்சிகள் எல்லாம் அரங்கேறி வருகின்றன. 108 தொகுதிகளில் வெற்றி பெற்று காங்கிரஸ், விசிக உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியில் அமர்ந்து ஒரு புதிய வரலாறையே தமிழக வெற்றிக் கழகம் படைத்துள்ளது.

இந்த தேர்தலில் திமுக இரண்டாம் இடத்தை பிடித்து எதிர்க்கட்சி அந்தஸ்தையாவது பெற்ற நிலையில், அதிமுக வெறும் 47 இடங்களை மட்டுமே கைப்பற்றி அதலபாதாளத்துக்கு சென்றுள்ளது. இதனால் அதிமுக தலைமை மீது அக்கட்சியினரே நம்பிக்கை இழந்துள்ளதாக தெரிகிறது.

போர்க்கொடி உயர்த்திய சி. விஜயபாஸ்கர்

குறிப்பாக, தேர்தல் முடிவுக்கு பிறகு, சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி, சி. விஜயபாஸ்கர் ஆகியோர் தனி அணியாக உருவாகினர். அந்த அணியைச் சேர்ந்த 25 எம்எல்ஏக்கள் விஜய்யின் தவெகவுக்கு வெளிப்படையாக தங்கள் ஆதரவை தெரிவித்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தினர்.

இது ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்போதே, அதிமுகவை சேர்ந்த 4 எம்எல்ஏக்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கட்சித்தாவல் தடை சட்டத்தை அதிமுக கையில் எடுத்ததால், அதிருப்தி அணியில் இருந்த எஸ்.பி. வேலுமணி தலைமையிலான எம்எல்ஏக்கள் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து சமாதானமாக சென்றனர். ஆனால், சி.வி. சண்முகம், விஜயபாஸ்கர் மட்டும் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பதை தவிர்த்து வந்தனர்.

எம்எல்ஏ பதவி ராஜினாமா

இதில், சி. விஜய பாஸ்கர் தனது தொகுதி மக்களிடமும், ஆதரவாளர்களிடமும் தவெகவில் இணைவது குறித்து கருத்து கேட்டு வந்ததாக கூறப்பட்டது. எனினும், இதுதொடர்பான அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகாமல் இருந்தது. இந்நிலையில் தான், சி. விஜயபாஸ்கர் தனது விராலிமலை தொகுதி எம்எல்ஏ பதவியை இன்று அதிரடியாக ராஜினாமா செய்துள்ளார்.

சரியும் அதிமுகவின் பலம்

தனது ராஜினாமா கடிதத்தை, சட்டமன்ற சபாநாயகரிடம் சி. விஜயபாஸ்கர் வழங்கினார். அவரது ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகரன் தெரிவித்தார். ஏற்கனவே 4 அதிமுக எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்திருந்த நிலையில், தற்போது சி. விஜயபாஸ்கரும் விலகியிருப்பது அதிமுகவுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. இதனால் சட்டமன்றத்தில் 47-ஆக இருந்த அதிமுகவின் பலம் 42-ஆக குறைந்துள்ளது.

ராஜினாமாவுக்கு முன்னதாக சி. விஜயபாஸ்கர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தலைமை என்பது

அதிகாரமோ, ஆணவமோ அல்ல. அது அர்ப்பணிப்பு மிகுந்த அரவணைப்பு. உழைக்கும் தொண்டர்களின் மனதை

வெல்ல முடியாத தலைமை, மக்களின் மனதை எப்படி வெல்லும்? உணர்வுகளை மதிக்காத இடத்தில்

உண்மையான பயணம் சாத்தியமா?" என பதிவிட்டிருந்தார்.

தற்போது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துள்ள சி. விஜயபாஸ்கர் விரைவில் தவெகவில் இணைவார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சி. விஜயபாஸ்கர் ராஜினாமாவால் தமிழகத்தில் 6 தொகுதிகள் காலியாகியுள்ளது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# மின் கட்டண உயர்வு: பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை

## அமைச்சர் நிர்மல்குமார் தகவல்

சென்னை:

"ஒவ்வொரு வருடமும் மின் கட்டணத்தை ஆண்டுக்கு அதிகபட்சமாக 6% உயர்த்திக் கொள்ளாலாம் என திமுக ஆட்சியில் கொண்டு வந்த பாலிசியே தவறானது. இதனால் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மின் கட்டண உயர்வு குறித்து முதல்வருடன் ஆலோசனை செய்து, மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்," என மின் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "ஆண்டுதோறும் மின் கட்டணத்தை எவ்வாறு உயர்த்த வேண்டும் என 2022-ல் போடப்பட்ட உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் கட்டண உயர்வு குறித்து மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து முதல்வர் மற்றும் அதிகாரிகளிடம் ஆலோசனை செய்துவிட்டு, முடிவெடு க்கப்படும். ஒவ்வொரு வருடமும் மின் கட்டணத்தை ஆண்டுக்கு அதிகபட்சமாக 6% உயர்த்திக் கொள்ளாலாம் என திமுக ஆட்சியில் கொண்டு வந்த பாலிசியே தவறானது. இதனால் அனைவருக்கும் பாதிப்பு ஏற்படுகிறது.

சிறைச்சாலைகளில் தேவையில்லாமல் டிரன்ஸ்பர்கள் நடப்பதாக புகார் வந்துள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். வெளிப்படைத் தன்மையுடன் இனி டிரான்ஸ்பர்கள் நடக்கும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



இந்திய விடுதலைப் போராட்டத்தில் கொங்கு மண்டலத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து தீரன் சின்னமலையுடன் இணைந்து போரிட்டவர் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் வீர வரலாற்றை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் தமிழக அரசு பள்ளிக்கல்வி பாட புத்தகத்தில் வெளியிட கோரி மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் செய்தி துறை அமைச்சர் ராஜ்மோகன் அவர்களை சென்னை தலைமைச் செயலகத்தில் சமூகநீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான் பேரவை நிறுவனத் தலைவர் ஈரோடு வடிவேல்ராமன் மனு அளித்தார்.. மாவீரன் பொல்லான் வீர வரலாற்று புத்தகத்தை வழங்கினார்.



மதுரை திருமங்கலம் தியாகி விஸ்வநாததாஸ் அவர்கள் 140 வதுபிறந்த மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ் தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லத்தில் அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# தமிழகத்தில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது

## மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் கண்டனம்



இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

திருவள்ளூர் மாவட்டம். கும்மிடிபூண்டி அருகே உள்ள சிப்கார்ட்டில் பணிபுரிந்து வந்த வட மாநிலத்தை சேர்ந்த கூலி தொழிலாளியின் மூன்று வயது சிறுமியை பாலியல் வன்புனர்வு செய்து படு கொலை செய்ய பட்ட சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது. மேலும் இச்சபவத்தை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி மிகவும் வண்மையாக கண்டிக்கிறது. மேலும் தமிழகத்தில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதனால் பெண்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. சிறுமியின் குடும்பதார்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்களையும் தெரிவித்து கொள்கிறோம். உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு ரூ 50 லட்சம் தமிழக அரசு வழங்க வேண்டும். சிறுமி பாலியல் மற்றும் உயிரிழப்பிற்கு காரணமானவர்களை சட்ட ரீதியாக கடுமையான நடவடிக்கை எடுத்து பினையில் கூட விடாமல் சாகும்வரை சிறைபடுத்துனால் மட்டுமே இது போன்று இவ்வுறக்கமின்றி மிகவும் கொடூரமான முறையில் பாலியல் குற்றங்களில் ஈடு பட நினைப்பவர்களுக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

எனவே : கொல்கத்தாவில்சோனா காட்சி மற்றும் மும்பையில் கிரன் சாலை போன்ற இடங்களில் அந்த அந்த அரசு அனுமதியோடு விபச்சார விடுதிகள் இயங்கி வருகின்றன. அந்த மாநிலங்களில் பாலியல் குற்ற சம்பவங்கள் மிகவும் குறைந்து உள்ளன. என்பது குறிப்பிடதக்கது. இது போன்று தமிழகத்தில் முக்கிய மாநகரங்களில் விபச்சார விடுதிகள் அரசு அனுமதியோடு இயங்கினால் மட்டுமே பாலியல் குற்ற சம்பவங்களை குறைக்க முடியும்.

மேலும். தமிழகத்தில் இனிவரும் காலங்களில் இது போன்று பாலியல் குற்ற சம்பவங்கள் நடைபெறாம்ல் தடுக்க உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்கவேண்டும். சிறுமி .பெண்களின் பாதுகாப்பை தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் உறுதி செய்ய வேண்டும். என மக்கள் எழுச்சி ஜனநாயககட்சி சார்பாக வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம் .இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

### தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக

# தமிழக முதலமைசர் ஜோசப் விஜய்க்கு கோவை மாவட்ட மேற்கு புறவழிச்சாலை திட்டத்தை விரைந்து முடிக்கக்கோரி கோரிக்கை மனு அனுப்பப்பட்டது



கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இதன் மாநில துணைத்தலைவராக வழக்கறிஞர் புஷ்பானந்தம் இருந்து வருகின்றார்.

இவர் தமிழக முதல்வர் ஜோசப் விஜய்க்கு தபால் மூலமாக கோரிக்கை மனுவை அனுப்பி உள்ளார்

அந்த மனுவில் கூறியிருப்பதாவது.. கோவையில் மேற்கு புறவழிசாலை திட்டமானது, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது, கடந்த திமுக, மற்றும் அதிமுக ஆட்சியின், மெத்தனப் போக்கால், இந்த திட்டம் ஆமை வேகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த திட்டம் காலதாமதம் ஆவதால் கேரளாவில் இருந்து சுற்றுலா பயணிகள் மற்றும் பொது போக்குவரத்து வாகனங்கள், நகரின் மையப்பகுதிகளுக்குள் நுழைந்து மேட்டுப்பாளையம் சாலையை அடையவேண்டிய நிலை உள்ளது. அதேபோல ஊட்டி மற்றும் மேட்டுப்பாளையத்தில் இருந்து வரும் கனரக வாகனங்கள் நகரின் மையப்பகுதிக்குள் வந்துதான் பாலக்காடு சாலையை அடைகின்றது. இதனால் நகருக்குள் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகின்றது. மேற்கு புறவழிச்சாலை திட்டமானது மொத்தம், 38 கிலோமீட்டர் நீளம் கொண்டவையாகும், இவை கடந்த 10 ஆண்டுகளாக வெறும் 20% வேலை பாடுகள், தான் முடிந்துள்ளது மீதமுள்ள, 80 சதவீத பணிகள் மிகவும் ஆமை வேகத்தில் நடைபெற்று வருகின்றது. எனவே இந்த பணிகளை துரிதப்படுத்தி உடனடியாக விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனவும், இந்த திட்டம் முழுமை அடைந்தால் நகரில் போக்குவரத்து நெரிசல் வெகுவாக கட்டுக்குள் வரும் எனவும், ஏற்கனவே இது தொடர்பாக பலமுறை முன்னாள் அமைச்சர்களிடம் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே தங்களின் அரசு இதனை செய்து தரும்படி நம்புகிறோம் எனவும், எனவே தமிழக முதல்வர் கருணை கூர்ந்து மேற்கு புறவழிச் சாலையை விரைந்து முடிக்கும்படி பொதுமக்கள் சார்பாகவும், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாகவும், கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார். மேலும் இதற்கான நகல் பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் குமார், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறை அமைச்சர் விக்னேஷ், கோவை மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்ட நெடுஞ்சாலை கோட்ட பொறியாளர், ஆகிய அதிகாரிகளுக்கும், அனுப்பி வைக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



### தமிழக முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு

# பள்ளி மாணவ, மாணவியருக்கு ஊக்கத் தொகை விருதுகள் வழங்கும் விழா

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் ஊராட்சியில் தமிழக முதல்வர் விஜய், பிறந்தநாளைமுன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன் ஏற்பாட்டில் நடைபெற்றது,

பள்ளி மாணவ மாணவியருக்கு கல்வி உபகரண பொருட்கள் மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவியர்களுக்கு ஊக்கத் தொகையுடன் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கு கல்வி விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது,

இதில் திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் விஜயராஜ், செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் தீனா, ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ மாணவியரிடையே சிறப்புரையாற்றி அரசுப் பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தலா ரூபாய் 5000 ஊக்கத்தொகையுடன் இரண்டாம் இடம் பிடித்த மாணவர்களுக்கு தலா 3000 ரூபாய் வீதம் மூன்றாம் இடம் பிடித்த மாணவர்களுக்கு தலா ரூபாய் 2000 வீதம் நான்காம் இடம் பிடித்த மாணவர்களுக்கு தலா 1000 என 64 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கினர், ஊராட்சியில் உள்ள 500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழுடன் புத்தகப் பை உள்ளிட்ட கல்வி உபகரணபொருட்களை வழங்கினர்,

தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது,

நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட இணை செயலாளர் வீரா, உட்பட மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்,

### கோவையில் நடைபெற்று வரும் பட்டுப்புடவை கண்காட்சியில்

# ரூ.4.5 லட்சம் மதிப்பிலான பட்டுப்புடவை பெண்களின் கவனத்தை ஈர்த்துள்ளது

## தங்களது பாட்டிகளின் பட்டுப்புடவைகளை மார்டன் உடைகளாக மாற்றி வருவதாக பெண்கள் பெருமிதமாக தெரிவித்துள்ளனர்



கோவை அவினாசி சாலையில் உள்ள ரெசிடென்சி டவர் ஹோட்டலில் பிரேமம் கல்யாண வைபோகம் என்ற பெயரில் திருமணத்திற்கான பட்டுப்புடவை கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்த கண்காட்சியில் பாரம்பரிய மற்றும் நவீன வடிவமைப்புகளுடன் கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டுப்புடவைகள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. திருமண சீசனை முன்னிட்டு நடத்தப்படும் இந்த கண்காட்சியில் காஞ்சிபுரம் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின், தேர்ந்தெடுக்கப்பட்ட பாரம்பரிய நெசவு சேலைகளும் இடம்பெற்றுள்ளன. இதில் பந்தினி, பைதானி, பனாரஸ், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு வகை பட்டுப்புடவைகள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக இக்கண்காட்சியில் இடம்பெற்ற ரூ.4.5 லட்சம் மதிப்பிலான பட்டுப்புடவை பெண்களின் கவனத்தை ஈர்த்தது.

தங்க மற்றும் வெள்ளி ஜரிகை கொண்டு, இளைஞர்களைக் கவரும் விதமாக எடை குறைவாக சேலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக, பிரேமம் சில்க்ஸ் ஸ்வர்ணமுகி தெரிவித்தார்.

மிசஸ் இந்தியா எர்த் கிளாசிக் போட்டியின் வெற்றியாளரும், உடற்கட்டமைப்பு நிபுணருமானஜெயாமகேஷ் இந்த கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, வெள்ளி, தங்க ஜரிகை வேலைப்பாடுகளுடன் கூடிய புடவையை அறிமுகப்படுத்தி வைத்துள்ளார்.

இதுகுறித்து ஜெயாமகேஷ் கூறுகையில்,

"பட்டுப்புடவைக்கு என்றுமே பெண்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. பட்டுப்புடவை மீது ஆசை கொண்ட இந்த காலத்து பெண்கள் தங்கள் பாட்டிகளின் பட்டுப் புடவைகளை மார்டன் உடைகளாக மாற்றி அணிந்து பெருமையடைந்து வருகின்றனர்." றார்.

# மக்களின் அரசாக தமிழக வெற்றிக்கழகம் செயல்பட்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து சலுகைகளையும் தர வேண்டும்

## கோவை பந்தயசாலையில், ஓபிசி மக்கள் உரிமை கட்சியினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்



கோவை பந்தயசாலையில் ஒபிசி மக்கள் உரிமை கட்சியின் சார்பாக செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்பொழுது செய்தியாளர்களிடம் பேசிய ஒபிசி மக்கள் உரிமை கட்சி தலைவர் ரத்தினசபாபதி, துணைத்தலைவர் வெள்ளியங்கிரி, பொருளாளர் வேலுச்சாமி, உறுப்பினர் சர்வேஸ்வரன், ஆகியோர் கூட்டாக

கூறியதாவது. தமிழகத்தில் புதியதாக பொறுப்பேற்று சீரிய முறையில் மக்கள் அரசாக செயங்பட்டு வரும் தமிழக வெற்றிக்கழகம் எடுத்து வரும் அனைத்து முயற்சிகளையும் பிர்படுத்த பட்ட மற்றும் மிக பிற்படுத்தப்பட்ட சமூதாயத்தினர் உரிமைக்கான கட்டமைப்பு ஆணையத்தில் சமீபத்தில் பதிவு செய்யபட்ட எங்களது ஒபிசி மக்கள் உரிமைக்கான கட்சி வரவேற்பதாகவும், மத்திய அரசின் ஜாதிவாரி கணக்கெடுப்பு செயல்பாடுகளை துவங்கப்பட்டுள்ள நிலையில் புதிய தவெக கட்சி பொறுப்பேற்று ஒரு மாதம் ஆகியுள்ள நிலையில், பாட்டாளி மக்கள் கட்சி அன்புமணி பிரிவினருக்கு, உயர்நீதிமன்றம், மற்றும் உச்சநீதிமன்றம் நிராகரித்த வன்னியர் தனி இட ஒதுக்கீடு கோரிக்கையை பல்வேறு வண்ணங்கள் பூசி மாநில அரசிடம் ஜாதிவாரி கணக்கெடுப்பு கோரிக்கை என்ற பெயரில், முதல்வரிடமும், அமைச்சரிடமும், தவறான தகவல்களை தந்து 251 சமுதாயங்களுக்கு அணிதி விளைவிக்கவும், பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார். இவற்றை தமிழக அரசு உடனடியாக பரிசீலனை செய்யக்கூடாது என்று தெரிவித்தனர். கடந்த 1989ம் ஆண்டு மிக பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு தனி ஒதுக்கீடு 20 சதவிகிதம் வழங்க பட்டதில் இருந்து, அதில் ஏறத்தாழ 15 சதவிகிதம் கல்வி, அரசு பணிகளை பெற்றது வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான், என்பதை அரசு அறிந்துகொள்ளவேண்டும், இந்த சூழ்நிலையில் புதியதாக தவெக அரசில், உள்ள புதிய அமைச்சர்களை ஜாதிவாரி, கணக்கெடுப்பை வலியுறுத்துகிறோம், என்ற பெயரில் அரசியலில் தன்னை முன்னுறுத்திக் கொள்வதற்காக, அன்புமணி ராமதாஸ் முயற்சித்து வருகிறார். பிற்படு த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கு அநீதி விளக்கும் செயல்பாடுகளை அவர், தொடர்ந்து செய்து வருகிறார் என்பதை எங்களது அமைப்பின் சார்பாக கண்டிப்பதுடன், தமிழக முதல்வருக்கும் இதனை தெரியப்படுத்துவதாக அவர்கள் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்த க்கது.



தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு । தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு கல்லாணை அவர்களின் முன்னிலையில் கோ புதூர் பேருந்து நிலையத்தில் மதுரை மாநகர் மாவட்ட வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் ஜெயம் கண்ணன் அவர்களின் ஏற்பாட்டில் மற்றும் இணை அமைப்பாளர்கள் பரமன்,விஜி,கார்த்தி,குமரேசன்,மணிகண்டன்,பிரபாகரன், விஜய் மதுரை மாநகர் வர்த்தக அணி சார்பாக நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இதில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் புதூர் பகுதி செயலாளர் கார்த்திக் மற்றும் வட்ட செயலாளர் நிர்வாகிகள் டாக்டர் யோகேஷ் , சசிகலா , வேல்முருகன் , ஜோ பீட்டர் அனைவரும் கலந்துகொண்டனர்.

## தமிழ் விவசாயிகள் சங்கம் சார்பில்

# பயிர்க்கடன், நகைக்கடன் மற்றும் கால்நடைக்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக்கோரி கலெக்டரிடம் மனு

தமிழ் விவசாயிகள் சங்கம்சார்பில்,பயிர்க்கடன்,நகைக்கடன் மற்றும் கால்நடைக்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.



மனு அளிக்கும் முன், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்புதமிழ் விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, "விவசாயத்தைவிடவிளையாட்டு மிகவும் கடினமானது" என்று பேசிய மந்திரி ஆதவ் அர்ஜீனா உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

மேலும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்,நகைக்கடன் மற்றும் கால்நடைக்கடன்களை முழுமையாக தள்ளுபடிசெய்யவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், உரங்களின் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்திருப்பதால் விவசாயிகள் கடுமையான பொருளாதார சிக்கலில் சிக்கியுள்ளதாக தெரிவித்தனர். எனவே, உர விலை உயர்வை உடனடியாக ரத்து செய்து, பழைய விலையை அமல்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர். தமிழக முதல்வர் கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்திருந்தாலும், அது முழுமையாக நடைமுறைக்குவரவில்லைஎனவும் சங்கத்தினர் குற்றம்சாட்டினர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாய விளைபொருட்களுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் பெரும் பொருளாதார பின்னடைவை சந்தித்து வருவதாக தெரிவித்த அவர்கள், விவசாயிகளின் பிரச்சனைகளை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று உடனடி தீர்வு காண மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனுவில் வலியுறுத்தினர்.



ஈரோடு மாவட்டம் 103 பெருந்துறை சட்டமன்ற தொகுதியில் இடைத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி நேற்று (16.06.2026) ஈரோடு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்ப்பு (First Level Checking FLC) பணிகளை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் பெருந்துறை வட்டார அளவில் பள்ளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவமாணவியரின் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும் நிகழ்வு நடைபெற்றது. ஈரோடு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மான்விழி உத்தரவின் பேரில் நடைபெற்ற இந்நிகழ்வில் நடுவராக பெருந்துறை கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கணித ஆசிரியர் பிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்று சிறந்த படைப்புகளை தேர்ந்தெடுத்தனர்.

# தென் தமிழகத்திலேயே முதன்முறையாக தழும்புகள் இல்லாத வேக்யூம் அசிஸ்டெட் தொழில்நுட்பம் மூலம் மார்பகக் கட்டியை நீக்கி மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனை சாதனை

தென்காசியைச் சேர்ந்த 20 வயது இளம்பெண்ணின் மார்பகத்தில் இருந்த ஃபைப்ரோ-அடினோமா எனும் கட்டியை, மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள், 'வேக்யூம் அசிஸ்டேட் பிரஸ்ட் பயாப்ஸி (VABI எனும்அதிறவீனமற்றும் குறைந்தபாதிப்பைஏற்படுத்தும் Invasive சிகிச்சை முறை மூலம் வெற்றிகரமாக நீக்கி சாதனை படைத்துள்ளனர் திறத்த நிலை அறுவை சிகிச்சைக்கு மாற்றாக, தழும்புகள் இல்லாத இந்தச் சிகிச்சை முறை தேன் தமிழகத்தில் முதன்முறையாக இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கடந்த நான்கு மாதங்களாக இடது மார்பகத்தில் வேசான வலி மற்றும் வீக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்த அந்தப் பெண், அல்ட்ராசவுண்ட் பரிசோதனையில் தீங்கற்ற கட்டியான ':ஃபைப்ரோ,அடினோமா பாதிப்புடன் இருப்பது கண்டறியப்பட்டார் இதனை தொடர்ந்து சிகிச்சைக்காக மதுரை அப்போவோ சிறப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வழக்கமான அறுவை சிகிச்சையைத் தவிர்த்து, சிறந்த அழகியல் பலனை (Cosmetic outcome) நோயாளிக்கு வழங்க,இன்டெர்வென்ஷனல் ரேடியோலஜி InterventionalRadiology) எனப்படும் கதிரியக்கத் சிகிச்சை மூலம் VASE சிகிச்சை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டது.

இந்தச் சிகிச்சையில், அல்ட்ராசவுண்ட் வழிகாட்டுத்துடன் ஒரு சிறிய துளை வழியாக செ.மீ அளவுள்ள கூட்டி,9G ABS பயன்படுத்தி எந்தவிதத் தையலும் இன்றி வெற்றிகரமாக நீக்கப்பட்டது. எந்தவித சிக்கங்களும் இன்றி சிகிச்சை முடித்த நிலையில், அந்த பெண் அன்றேவீடுதிரும்பினார்

விரைவான குணமடைதல் சிகிச்சையை மேற்கொண்ட கதிரியக்க நிபுணர் டாக்டர் கே. பி. சந்தோஷ் பாபு கூறுகையில், "வேகலும் அசிஸ்டெட் பிரஸ்ட் பயாப்ஸி (Nass) என்பது ஒரு மேம்பட்ட குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் அகிநவீன தொழில்நுட்பமாகும். இது தீங்கற்ற மார்பகக் கட்டிகளை அறுவை சிகிச்சை இல்லாமல் முழுமையாக நீக்க உதவுகிறது. இந்தச் சிகிச்சையானது அளம்பெண்களுக்கு அழகியல் ரீதியாகவும் சிறந்த தீர்வாக இருக்கிறது,மேலும் குறைத்த வலி மற்றும் அறுவை சிகிச்சைத் தழும்புகள் இவ்வாமல் மேற்கொள்ளப்படுவதால், இது இளம் பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் அமைகிறம், இமேஜ் கெட்ட்பகச் சிச்செைகள், தீங்கற்ற மார்பக் கட்டிகளை கையாறம் முறையை மாற்றிவருகின்றன.அய்யாத்து சிறிய வழிகாட்டுதுடன் கூடிய AR மம் சாதாரண மார்பகத் திசுக்களைப் பாதுகாத்து, சிறிய துளை வழியாக கயைப்டி MASS மூலம் துல்லியமாக அடையாளம்தெரிவிக்கமுடிகிறது. இதனால் பெண்கள் நோய் இல்லாத பயத்தினை தவிர்க்கலாம்' என்று தெரிவித்தார். கட்டிகளைத்முத்க நாணயில்லாச் சுரப்பியல் கிபணர் டாக்டர்ஆர்எம் மணிகண்டன் கூரகையில் "தளிப்பாக இளம் பெண்களின் மார்பகப் பிரச்சனைகளைக் கை பல்துறைப்பீடு Mautole celiacon மற்றும் தன பிசவும் அவசியம் மாற்ற மதிப்பீடு மருத்துவக் குழவின் விரிவான வளர்சிதை ம ஒருங்கிணைந்த அணுகுமுறை மிகவும் அவசியம் எவசசைக் இட்டங்கள் விரைவான குணமடைகளுக்கும் நீண்டகாலஆரோக்கியத்திற்கும் பெரிதும் உதவுகின்றன என்றார்

தீனதயாளன் குறிப்பிடுகையில், பைப்ரோஅடினோமா என்பது ஒரு நீங்கற்ற மார்பகப்பாதிப்புஎன்றாலும், அதை மற்றமார்பகக் கட்டிகளிலிருந்து வேறுபடுத்திக்கண்டறிய துல்லியமான பரிசோதனையும்,சரியான நேரத்தில் தலையீடும் (Timely intervention)மிகமுக்கியம். VABB போன்ற அதிநவீன இமேஜ்-கைடட் (Image-guided) நுட்பங்கள், தேவையற்ற அறுவை சிகிச்சைகளைத் தவிர்த்து, மிகத் துல்லியமான நோய் கண்டறிதலையும் சிகிச்சையையும்வழங்குகின்றன." என்றார்.

மதுரை அப்போலோ பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனையின் பெண்கள் நல சிகிச்சை மருத்துவ நிபுணர் டாக்டர் ராகவி நடராஜன் அவர்கள் கூறுகையில், "உடல் அழகைப் பாதுகாத்து, விரைவாகக் குணமடைய உதவும் இத்தகைய குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் சிகிச்சை முறைகள் (Minimally invasive procedures), இளம் பெண்களின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.நவீன மகளிர் நல மருத்துவ சிகிச்சையில், பெண்கள் மையப்படுத்தப்பட்ட சிகிச்சை பரிசோதனைகள் மற்றும் அழகியல் ரீதியான சிறந்த முடிவுகள் (Cosmetic outcomes) ஆகியவை மிக முக்கியமான அம்சங்களாகும்," என்று தெரிவித்தார்.

மூத்த மயக்க மருந்து நிபுணர் டாக்டர் அப்துல் காதர் அவர்கள் கூறுகையில், "முறையாகத் திட்டமிடப்பட்ட மயக்க மருந்து மேலாண்மையே குறைந்தபாதிப்பைஏற்படுத்தும் சிகிச்சை முறைகளின் வெற்றிக்கான முக்கியக் காரணியாகும். மேலும் இது போன்ற சிகிச்சையில் பொது மயக்க மருந்து இல்லாமல் குறிப்பிட்ட இடத்தை மரத்துப்போக செய்யும் வோக்கல் அனஸ்தீசியா மூலம் மேற்கொள்ளப்படும்போது பெண்களுக்கு அதிகபட்ச சௌகரியம், பாதுகாப்பு மற்றும் விரைவான குணமடைதலை உறுதி செய்ய முடியும்' என்று தெரிவித்தார்.

மதுரை மண்டலத்தின் தலைமைச் செயல் அதிகாரிடாக்டர்நிகில்ஓவாரி கூறுகையில், நோயாளிகளுக்கு சிரமத்தைக் குறைத்து, மருத்துவமனையில் தங்கும் காலத்தைக் குறைத்து. சிகிச்சை முடிவுகளை மேம்படுத்தும் நவீன தொழில்நுட்பங்களை மதுரை அப்போலோ தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறது. VABI போன்ற சிகிச்சை முறைகள், உலகத்தரம் வாய்ந்த மற்றும் குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் (Minimally Invasive) சிகிச்சைகளை வழங்குவதில் எங்கள் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றன என்று தெரிவித்தார்

மருத்துவத் தலைவர் டாக்டர் பி. சோபனா குறிப்பிடுகையில்,"மேம்பட்ட இமேஜ்-கைடட் (image-guided) சிகிச்சை முறைகள், பாரம்பரிய அறுவை சிகிச்சையின் தேவையை வெகுவாகக் குறைப்பதோடு, துல்லியமான,பாதுகாப்பான மற்றும் பயனுள்ள சிகிச்சைகளை வழங்க எங்களுக்கு உதவுகின்றன. இது நோயாளிகளின் உடல்நலம் விரைவாகக் குணமடைவதை உறுதி செய்கிறது' என்று தெரிவித்தார்.

அப்போலோ மருத்துவமனையில், நோயாளிகள் அதிநவீன தொழில்நுட்பம், அனுபவம் வாய்ந்த கதிரியக்க நிபுணர்கள் (Interventional Radiologists) மற்றும் பாதுகாப்பான, துல்லியமான, நோயாளி மையப்படுத்தப்பட்ட சிகிச்சையை வழங்க உறுதிபூண்டுள்ள பல்துறை மார்பக பராமரிப்புக் குழுவின் (Multidisciplinary breast care team) சேவைகளைப் பெறுகின்றனர். VABB போன்ற புதுமையான சிகிச்சை முறைகள் மூலம், நோயாளிக்கு அதிக சௌகரியம், வசதி மற்றும் சிறந்த மருத்துவத் தரத்தை மையமாகக் கொண்டு, உலகத்தரம் வாய்ந்த மார்பகப் பராமரிப்பை அப்போலோ தொடர்ந்து வழங்கி வருகிறது.

இந்த வெற்றிகரமான சிகிச்சை, மேம்பட்ட மார்பகப் பராமரிப்பு,கதிரியக்கவியல் மற்றும் குறைந்தபாதிப்பைஏற்படுத்தும் சிகிச்சை முறைகளில் மதுரை அப்போலோ சிறப்ப மருத்துவமனையின் நிபுணத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு,தென் தமிழகம் முழுவது உள்ளநோயாளிகளுக்கு அதிநவீன சிகிச்சை வசதிகளைகொண்டுசேர்ப்பதற்கான அத உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# கோபியில் செங்கோட்டையன் வெற்றிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அதிமுக வழக்கு

சென்னை:

கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில்,தமிழக அமைச்சர் செங்கோட்டையன் வெற்றியை எதிர்த்து அதிமுக வேட்பாளர் பிரபு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.



நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட செங்கோட்டையன், தன்னைஎதிர்த்துபோட்டியிட்ட திமுக வேட்பாளர் நல்லசிவத்தை விட 16,620 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். செங்கோட்டையனின் வெற்றியை எதிர்த்து, கோபிசெட்டிப்பாளையம் அதிமுக வேட்பாளர் பிரபு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், வேட்புமனுவில், சொத்து, குற்றவழக்குவிவரங்கள் தெரிவிக்கும் பிரமாணப் பத்திரத்தில் தகவல்களை சான்றளித்து கையெழுத்திட்டுள்ள நோட்டரி வழக்கறிஞரின் உரிமம் காலாவதியாகி விட்டது. அதனால் அந்த வேட்புமனுவை ஏற்றது முறையற்றது என்பதால், செங்கோட்டையன் வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல, லால்குடி தொகுதியில், தவெகவேட்பாளரைவிட 2,739 வாக்குகள் அதிகம் பெற்று, வெற்றி பெற்ற அதிமுக எம்எல்ஏ லீமா ரோஸின் வெற்றியை எதிர்த்து, தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் பாரிவள்ளல் சார்பில் வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், ஏழு நிறுவனங்களில் தனக்குள்ள பங்குகள் குறித்த விவரங்களை லீமா ரோஸ் மறைத்துள்ளதாகவும், அதிமுக துண்டு அணிந்து கொண்டு, தேவாலயங்களில் பிரச்சாரம் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.இதேபோல, புதுக்கோட்டை தொகுதியில், 1,867 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற திமுக எம் எல் ஏ முத்துராஜாவின் வெற்றியை எதிர்த்து தவெக வேட்பாளர் ஷெரீப் தேர்தல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 12 தமிழக மீனவர்களை இலங்கை விடுவிப்பு

ராமேசுவரம்:

ராமேசுவரம் பாம்பன் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற டேவிட் என்பவரது விசைப்படகை இலங்கை கடற் படையினர் ரோந்து பணியின் போது சிறைப் பிடித்து, அப்படகிலிருந்த 12 மீனவர்களை, கடந்த பிப்.23-ம் தேதி கைது செய்தனர். அவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடித்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து வெளிச்சுரா சிறையில் அடைத்தனர்.



இ ந்நிலையில்மீனவர்களின் காவல் நேற்றுடன் நிறைவடைந்ததை தொடர்ந்து , 12 பேரும் வெளிச்சுரா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை, மீண்டும் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தால் அபராதம், சிறைதண்டனை அனுபவிக்க நேரிடும் என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்து நீதிபதி உத்தரவிட்டார்.



ஈரோடு மாவட்ட இரத்த தான ஒருங்கிணைப்பாளர்கள் சங்கம் சார்பில் உலக இரத்த கொடையாளர் தின விழா நடைபெற்றது. இதில் ஜே.பிரபாகர், மருத்துவர்கள் எஸ்.செந் தில் குமரன், ஜி.சரண்யா, எஸ்.கவிதா, சசிகலா, ராம்குமார் மற்றும்ஈரோடுவீரமணி,குமாரசாமி,கே.ஆர்.வெங்கடாசலம்,சரவணன்ஆகியோர்சிறப்புவிருந்தினர்களாகப்பங்கேற்று, சிறந்த இரத்த கொடையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கான விருதுகளை வழங்கினர். முன்னதாக இ. கார்த்திகேயன்வரவேற்புரையாற்ற,வி.எம்.இளங்கோவாழ்த்துரைவழங்கினார்.நிறைவாகர.கவியரசுநன்றியுரையாற்றினார். தொடர்ந்து ரத்த தானத்தில் ஈடுபடும் ஈரோடு மாவட்ட காவல்துறை சேர்ந்த காவலர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கப்பட்டது.

# ரூ.75,000 வரை பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி; முதலமைச்சர் விஜய் உத்தரவு




சென்னை: கூட்டுறவு வங்கிகளின் மூலம் ரூ.75,000 வரை பயிர்க்கடன் பெற்ற குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிகளுக்கு 100 சதவீதம் முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து தமிழக முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தமிழக முதல்வர் விஜய் 2026 மே 25-ம் தேதியில் ரூ.50,000 வரை பயிர்கடன் பெற்ற குறு, சிறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டம் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாநிலம் முழுவதிலும் இருந்து இவ்விவசாய கடன் தள்ளுபடி குறித்து மறு பரிசீலனை செய்ய பல்வேறு தரப்புகளில் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன. தமிழக முதல்வர் மேற்கண்ட கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலனை செய்ய உத்திரவிட்டதற்கு இணங்க மேற்கண்ட பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தினை மறு ஆய்வு செய்திட ஜூன் 15-ம் தேதி அன்று தலைமைச் செயலகத்தில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இம்மறு ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் விஜய் தலைமையில் விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக, வேளாண்மை - உழவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுடன் மறு பரிசீலனை செய்யப்பட்டது.

இந்திய ரிசர்வ் வங்கியின் 2025-ம் ஆண்டு நவம்பர் 28ம் தேதியிட்ட அரசு கடன் தள்ளுபடி திட்டங்களுக்கான மாதிரி செயல்பாட்டு நடைமுறைகளின்படி, பயிர்க்கடன் தள்ளுபடிக்கான முழுத்தொகையையும் அரசானது 45 முதல் 60 நாட்களுக்குள் முழுமையாக செலுத்த வேண்டும் என்ற வழிகாட்டுதலின்படியும், தமிழ்நாடு அரசின் இன்றைய நிதி நிலை மற்றும் நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், கூட்டுறவு வங்கிகளில் 2025-ம் ஆண்டு மே 1ம் தேதி முதல் 2026ம் ஆண்டு பிப்ரவரி 28ம் தேதி வரை பயிர் கடன் பெற்ற 14.43 லட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.6,000 கோடி வரை கீழ்க்கண்டவாறு தள்ளுபடி செய்ய தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

தள்ளுபடி விவரம் வருமாறு:

குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிக்கான தள்ளுபடி (ரூபாயில்) 75,000 வரை பெற்றவர்களுக்கு கடன் தொகை முழுவதும் (100%) தள்ளுபடி.

ரூ.75,000-க்கும் மேல் கடன் தொகை பெற்ற குறு, சிறு மற்றும் இதர பெரு விவசாயிக்கு ரூ.35 ஆயிரம் தள்ளுபடி.

இதன் மூலம் கடந்த நிதியாண்டில் பயிர்க்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சமாக ரூ.75,000மும் குறைந்தபட்சமாக ரூ.35,000மும் பணப்பயன் கிடைக்கும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடி, எதிர்வரும் சாகுபடி பருவத்திற்கு கடன் பெற விரும்பும் விவசாயிகளுக்கு பெருமளவில் பயன்தரும்.

· 8,33,773 குறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.3,599.67 கோடி

· 5,16,183 சிறு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.1,995.42 கோடி

·93,548 இதர பெரு விவசாயிகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ.337.15 கோடி

ஆக கூடுதல் 14,43,504 விவசாயிகளுக்கு உத்தேச பயிர்க் கடன் தள்ளுபடித் தொகை ரூ.5,932.23 கோடி ஆகும்.

இந்தப் பயிர்க்கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் 2025ம் ஆண்டு மே 1ம் தேதி முதல் 2026 பிப்ரவரி 28ம் தேதி வரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றுள்ள 14,43,504 விவசாயிகள் பயனடைவார்கள். இதனால் அரசுக்கு ரூ.5,932.23 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்." என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகர் ரஜினிகாந்துடன் நயினார் நாகேந்திரன் திடீர் சந்திப்பு




சென்னை: நடிகர் ரஜினிகாந்தை, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் இன்று திடீரென சந்தித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "இன்று சென்னை போயஸ் தோட்டத்தில், தாதாசாகேப் பால்கே விருது பெற்ற இந்திய திரையுலகின் சூப்பர் ஸ்டார், பத்மபூஷன் ரஜினிகாந்தை, பாரதிய ஜனதா கட்சியின் தேசியச் செயலாளரும் தமிழக பாஜகவின் மேலிட பொறுப்பாளருமான அரவிந்த் மேனனுடன் இணைந்து மரியாதை நிமித்தமாக சந்தித்தோம்.

அப்போது, பாரத பிரதமர் நரேந்திர மோடியின் கடந்த 12 ஆண்டுகால மக்கள் நல ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட முக்கிய வளர்ச்சி திட்டங்கள் மற்றும் நாட்டின் முன்னேற்றப்பயணத்தை எடுத்துரைக்கும் வகையில் வெளியிடப்பட்ட சிறப்பு நூல்களை அவருக்கு வழங்கி மகிழ்ந்தோம். பாரதிய ஜனதா கட்சியின் மாநிலச் செயலாளர் கராத்தே தியகராஜன் மற்றும் மாநில பிரச்சாரப்பிரிவு அமைப்பாளர் பாண்டியராஜ் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்." எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜகவின் முன்னாள் தலைவரான அண்ணாமலை சமீபத்தில் கட்சியிலிருந்து விலகி 'வீ தி லீடர்ஸ்' என்ற இயக்கத்தை தொடங்கினார். அவர் விரைவில் அரசியல் கட்சியை தொடங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தச் சூழலில், ரஜினிகாந்தின் மனைவியான லதாவும் 'மக்கள் மேடை' என்ற இயக்கத்தை தொடங்கியுள்ளார். இந்தச் சூழலில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், ரஜினிகாந்தை சந்தித்துள்ளது எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

# நீட் மறுதேர்வு முடியும் வரை ‘டெலிகிராம்’ செயலிக்கு இந்தியாவில் தடை




புதுடெல்லி:

நீட் மறுதேர்வு வரும் ஜூன் 21-ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், இந்தத் தேர்வு முடியும் வரையில் டெலிகிராம் மெசேஜிங் செயலிக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டு ள்ளது. இந்த தடையை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் பிறப்பித்துள்ளது. இதை தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்காக நீட் (யுஜி) நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது. அந்த வகையில், நடப்பு கல்வி ஆண்டு சேர்க்கைக்கான நீட் தேர்வு மே 3-ம் தேதி நடந்தது. வினாத்தாள் கசிந்ததால் அத்தேர்வு ரத்து செய்யப் படுவதாகவும் நீட் மறுதேர்வு ஜூன் 21-ம் தேதி நடத்தப் படும் என்றும் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்தது.

நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன. சமூக வலைதளம் மூலம் பிரபலமான கரப்பான் பூச்சி ஜனதா கட்சி, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் போராட்டம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், நீட் மறுதேர்வுக்கான ஹால் டிக்கெட்டை தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து வருகின்றனர்.


இச்சூழலில், இந்த தேர்வு முடியும் வரையில் டெலிகிராம் மெசேஜிங் செயலிக்கு தடை விதிக்க வேண்டும் என அரசுக்கு தேசிய தேர்வு முகமை பரிந்துரைத்துள்ளது. அதன்படி மத்திய அரசு அந்த செயலிக்கு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

அரசின் இந்த வழிகாட்டுதலை தேசிய தேர்வு முகமை வரவேற்கிறது. தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-இன் பிரிவு 69ஏ-ன் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தியாவில் டெலிகிராம் அக்சஸ், நீட் மறுதேர்வு நடைபெற்று முடியும் வரை தடை செய்யப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதோடு இந்தச் செயலியில் ஜூன் 30 வரை மெசேஜ் எடிட்டிங் அம்சத்தை தற்காலிமாக தடை செய்யுமாறும் கோரியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

டெலிகிராம்: கடந்த 2013-ல் அறிமுகமான மெசேஞ்சர் செயலிதான் டெலிகிராம். இதனை பாவெல் துரோவ் மற்றும் அவரது சகோதரர் நிகோலா துரோவ் இணைந்து தொடங்கினர். நிதி மற்றும் ஐடியாலஜி சார்ந்த பணியை பாவெலும், டெக்னிக்கல் சமாச்சாரங்களை நிகோலாவும் கவனித்துக் கொள்கின்றனர்.

# புதுச்சேரியில் தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது: வைத்திலிங்கம் எம்.பி. உறுதி



புதுச்சேரி: "புதுச்சேரியில் தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது. தட்டாஞ்சாவடி இடைத்தேர்தலில் தவெக போட்டியிட்டால் காங்கிரஸ் ஆதரவு வழங்கும்" என்று புதுவை மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இன்று அவர் கூறியதாவது; முதல்வர் ரங்கசாமியின் சர்வாதிகாரப் போக்குக்கு அமைச்சரவையோ, சட்டமன்றமோ தேவையில்லை. அவர் ஒருவர் மட்டுமே அரசு நிர்வாகத்தை நடத்துவார்.

புதுச்சேரியில் தவெகவுடன் காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது. தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து கட்சித் தலைமை முடிவு செய்யும். இடைத்தேர்தலில் நட்பு போட்டிக்கு வாய்ப்பில்லை. விஜய் கட்சியான தவெகவை திமுக குறைவாக மதிப்பிடுவது தான் தோல்விக்கு காரணம்.

நாங்கள் நட்பு ரீதியாக போட்டியிட்ட தொகுதிகளில் திமுக தான் வெற்றி பெற்றுள்ளது. தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். புதுவையில் கூட்டணிக்கு திமுகதான் தலைமை தாங்கியது. அதனால் தோல்விக்கும் திமுகவே காரணம். கூட்டணி தலைமையை திமுகவே எடுத்து கொண்டது. கூட்டணி கட்சிகளிடம் தன்னிச்சையாக திமுக பேச்சுவார்த்தை நடத்தியது.

தட்டாஞ்சாவடியில் தவெக போட்டியிட்டால் காங்கிரஸ் ஆதரவு அளிக்கும். தட்டாஞ்சாவடி தொகுதி முதல்வர் தொகுதி என வாக்களித்தனர். ஆனால் அந்த தொகுதியை முதல்வர் ராஜினாமா செய்துள்ளதால், அந்தத் தொகுதி மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# டெல்லியைத் தாக்கிய புழுதிப் புயல் மணிக்கு 92 கி.மீ. வேகத்தில் வீசிய காற்று



புதுடெல்லி: டெல்லியின் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்திய வானிலை ஆய்வு மையம் (ஐஎம்டி) 'ரெட் அலர்ட்' விடுத்திருந்த நிலையில், அங்கு நேற்று கடுமையான புழுதிப்புயல் வீசியது.

தலைநகரின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், மணிக்கு 60-80 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. பாலம் மற்றும் துவாரகா பகுதிகளில் நேற்று பிற்பகல் 2:30 மணி நிலவரப்படி, மணிக்கு 92 கி.மீ. வேகம் வரை காற்று வீசியது.

முன்னதாக, டெல்லியின் பல இடங்களில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யக்கூடும் என 'ஆரஞ்சு அலர்ட்' விடுக்கப்பட்டிருந்தது. டெல்லியை ஒட்டியுள்ள ஃபதேஹாபாத், ஜிந்த், சோனிபட், ரோஹ்தக் உள்ளிட்ட பகுதிகளிலும் புழுதிப் புயலைத் தொடர்ந்து லேசான மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. டெல்லியில் லேசான மழை பெய்தது. இமயமலைப் பகுதியில் ஏற்பட்டுள்ள திடீர் மேற்கத்திய இடையூறு காரணமாக இந்த மழைப் பொழிவு ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த அமைப்பின் தாக்கம் குறையத் தொடங்குவதால், தலைநகரில் செவ்வாய்க்கிழமை முதல் படிப்படியாக வெப்ப நிலை உயரும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தீவிர மேற்கத்திய இடையூறுகளின் விளைவாக, வடமேற்கு இந்தியாவில் ஜூன் 19 வரை மழை தொடரும் என ஐஎம்டி தெரிவித்துள்ளது. இந்த மழை கடுமையான வெப்ப அலையிலிருந்து மக்களுக்கு நிம்மதியை அளித்துள்ளது.

# A viral video and Akal Takht's 'antiGuru' tag for Bhagwant Mann: Big row in Punjab



*A big controversy has erupted in Punjab after allegations of chief minister Bhagwant Mann disrespecting Sikh Gurus in a now-viral video. The AAP leader, though, claimed he was not the person in the clip. He rubbished allegations that he disrespected Sikh Gurus, and accused political opponents of spreading a smear campaign to defame him.*

*This comes a day after the Akal Takht, the highest temporal authority of Sikhs, declared the Punjab CM a 'Guru Dokhi' (anti-Guru) and 'Khalsa Panth Virodhi' (anti-Khalsa Panth) over the controversial clip. The Sikh clergy also accused Mann of misleading them about the video's authenticity.*

*The footage, seemingly in some kind of a room, allegedly shows a man purportedly resembling the chief minister consuming alcohol and splashing liquor on photographs of Sikh Gurus.*

*In a video message, Mann categorically denied that he was the man seen in the clip.*

*"I completely reject this video," he said. Recalling his earlier appearance before the Akal Takht in January, Mann said he had already clarified that the person in the footage was not him. "The person seen in the video does not match my height and physique," he said. "But I am surprised at how the people sitting at the highest position of religious bodies are indulging in such false propaganda at the behest of their political bosses," Mann said.*

*The Sikh clergy also directed the Sikh community to "shun ties" with Mann and summoned all Sikh MLAs in Punjab, irrespective of party affiliation, along with members of the Punjab Cabinet, to appear before the Akal Takht on June 29 in connection with the state's anti-sacrilege law.*

*"They are indulging in mud-slinging to defame me. Because I am taking decisions for the protection of water, 'gurbani', farming and the youth, which they cannot tolerate at all," he added.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.